1971 ஜூன் 26]

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : நம்முடைய காட்டில் சிங்கம் இல்லை. புலிகள் திருநெல்வேலி மாவட்டத்தில் முண்டந் துறையில் இருக்கின்றன. அது சரணாலயமாகப் பாதுகாக்கப்படுகிறது.

* 64 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether there are elephant sanctuaries in the State; and

(b) the steps taken to improve them?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) யானைகளுக்கென்று தனியாக உய்விடம் எதுவும் இம் மாநிலத்தில இல்லை. ஆனால், மற்ற வனவிலங்குகளுடன் அதிக எண்ணிக்கையில் யானைகள் முதுமலை வன விலங்கு உய்விடத்தில் காணப்படுகின்றன.

(இ) தமிழ் நாடு முழுவதும் யானைகளைச் சுடுவது தடை செய்யப்பட்டுள்ளது. ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் வரும் "இயற்கைப் பாதுகாப்பு—வன விலங்குகளின் பாதுகாப்பு" திட்டத்தின் மூலமாக ஒவ்வொரு ஆண்டும், சாலைகள் போடுதல், பயணிகளுக்கு விடுதிகள் கட்டுதல், விலங்குகளுக்குத் தண்ணீர் வசதி முதலியவை செய்து தரப்படுகின்றன.

திரு. அ. ப. சண்முகசுந்தரம் : சென்ற ஆண்டு பரம்பிக்குளம் அணையிலிருந்து வரும் கான்டூர் கால்வாயில் யானை ஒன்று விழுந்து இறந்து விட்டது. அதை வெளியே எடுப்பதிலே கால தாமதம் ஏற்பட்டதால்தான் அது இறந்துவிட்டது. அப்படி இனிமேல் காலதாமதம் செய்யாமல் இருப்பதற்கும், யானைகள் அவ்வாறு விழுந்து விடுவதில் இருந்து பாதுகாப்பதற்கான ஏற்பாடுகள் செய்வதற்கும் அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : ஆள் சஞ்சாரம் இல்லாத இடத்தில் விழுந்துவிட்டால் தகவல் வந்த உடன் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுகிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : வன விலங்குகளைப் பாதுகாக்க வேண்டுமென்று அக்கறை செலுத்தும் இந்த அரசாங்கம் கார்ப்பரேஷனால் நடத்தப்படும் மிருகக் கண்காட்சி சாலையை நல்ல சூழ்நிலைக்கு மாற்றும் திட்டம் வைத்திருக்கிறதா? எப்போது அந்தத் திட்டம் நடைமுறைக்கு வரும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி யானைகளைப் பற்றியது.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : எப்போது என்று சொல்ல முடியாது; பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

Appointment of Legal Adviser for State Transport Department

* 65 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether any Legal Adviser has been appointed to the State Transport Department; and

(b) if so, the details thereof?